


### மத்திய அரசு தயாரித்த

# 'ஆதார்' அடையாள அட்டை: சாய் ராம் கல்லூரி மாணவர்களுக்கு சென்ட்ரல் பாங்க் வழங்கியது

சென்னை, செப். 27-

இந்திய அரசின் யுனிக் ஐடென்டிபிகேஷன் அதாரிட்டி ஆப் இந்தியா, கம்ப்யூட்டர் நிபுணர் நந்தன் நில்கேனி தலைமையில் இயங்கி வருகிறது. இந்த அமைப்பு தயாரித்த 'ஆதார்' அடையாள அட்டை வெளியீட்டு விழா சாய்ராம் என்ஜினியரிங் கல்லூரியில் இன்று காலை நடைபெற்றது. அதனை சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியாவின் தி.நகர் கிளை தலைமை மேலாளர் ருக்மாங்கதா வெளியிட முதல் அட்டையை கல்லூரியின் தலைமை செயல் அதிகாரி சாய்பிரகாஷ் பெற்றுக் கொண்டார்.

## 12 இலக்க எண்

இந்திய நாட்டில் வசிக்கும் ஒவ்வொருவருக்கும் 12 இலக்க 'தனித்தன்மையான அடையாள எண்' வழங்கப்படும். இந்த அடையாள எண் 'ஆதார்' என்று அழைக்கப்படுகிறது.

ஒரு தனி நபரின் பெயர், வயது, பாலினம், முகவரி மற்றும் புகைப்படம், கருவிழி, கைரேகை போன்றவற்றை பதிவு செய்து அதன் மூலமாக 'ஆதார் எண்' கொடுக்கப்படுகிறது. இதனால் எவர் ஒருவரும் மற்றொருவரின் அடையாளத்தை போலியாகவோ அல்லது பிரதியாகவோ பயன்படுத்த முடியாது. இது இந்திய நாட்டில் வசிக்கின்றனர் என்ற அடையாளத்தை உறுதிப்படுத்துகின்றது.

அடையாள அட்டையில் தனித்தன்மையான அடையாள எண் இருக்கும். ஒரு வயது குழந்தைக்கு கூட இதனை பெறலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்ச்சியில் சாய் பிரகாஷ் பேசிய தாவது:-

பாஸ்போர்ட்டுக்கு இணையாக உள்ள இந்த அடையாள அட்டை ஒவ்வொரு இந்திய குடிமகனுக்கும் மிகவும் அத்தியாவசியமான ஒன்றாகும். திட்டக் கமிஷன் தயாரித்துள்ள அட்டை தற்போது இந்தியா முழுவதும் வழங்கப்பட்டு வருகிறது.

## ஆயுட்கால அட்டை

இந்தியாவிலேயே முதல் முறையாக மாணவர்களுக்கு வழங்கும் திட்டம் இப்போது இங்கு நடைபெற்று வருகிறது. சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா இந்த அடையாள அட்டைகளை எங்கள் கல்லூரி மாணவர்களுக்கு வழங்கி துவக்கி வைக்கிறது.

இந்த கல்லூரியில் பயிலும் சுமார் 20 ஆயிரம் மாணவர்களுக்கு இந்த அடையாள அட்டை வழங்கப்படுகிறது. மாணவர்களின் பெற்றோர்களுக்கும் இந்த அட்டையை இலவசமாக வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. இது ஒரு ஆயுட்கால அடையாள அட்டையாகும். அதனை புதுப்பிக்க வேண்டிய அவசியமில்லை. ஒருவர் தனது அடையாளத்தை உறுதி செய்ய மிகவும் பயனுள்ளதாக இருக்கும். எதிர்காலத்தில் வருகின்ற மத்திய, மற்றும் மாநில அரசின் நலத் திட்டங்களை எளிதில் பெற வழி வகுக்கிறது. புதிய வங்கி கணக்கு துவக்க பயன்படுகிறது. குடும்ப அட்டை, வாக்காளர் அட்டை மற்றும் நமது இதர தேவைகளை பெற ஏதுவாக இருக்கும்.

கிராமம் மற்றும் நகர்ப்புறங்களில் வசிக்கும் பலர் எந்தவிதமான அடையாள மற்றும் முகவரி சான்றிதழ்கள் இல்லாமல் சிரமப்படுகின்றனர். அப்படிப்பட்ட நிலைமையை மாற்றுவதற்காக இந்த 'ஆதார்' அடையாள எண் திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது.

உலக அளவில் அமெரிக்கா உள்ளிட்ட சமூக பாதுகாப்பு அடையாள எண்களுக்கு சமமாக இந்த அடையாள எண் இருக்கும். ஒவ்வொரு இந்திய குடிமகனுக்கு இது அவசியம் ஆகும்.

இவ்வாறு அவர் கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் கல்லூரி டீன் அருணாசலம், இயக்குனர் மாறன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.